வதற்கு உண்டான காலத்திற்கு முன்பாக விலை நிர்ணயிப்பது என்ற முடிவு எடுத்திருந்தாலும் அறுவடை நெருங்கிக் கொண்டிருந்தபோது மத்திய அரசு விலையைப் பொறுத்தவரையில் எந்தவிதமான முடிவும் எடுக்காத சூழ்நிலையில் விவசாயிகள் அந்தக் கோரிக்கையை வைத்த காரணத்தால், அறுவடை நெருங்கிக் கொண்டிருந்த காரணத்தாலும் அந்த விலை அறிவிக்கப்பட்டதே தவிர வாக்குகளைப் பெறுவதற்கு அல்ல. அந்த நிலை இந்த அரசுக்கு இன்னும் ஏற்படவில்லை, நிச்சயமாக ஏற்படவும் செய்யாது.

ஆ. கூனூரிலும், உதகமண்டலத்திலும் ஏற்பட்டுள்ள கடுமையான விறகுத் தட்டுப்பாடு குறித்து.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, “ நீலகிரி மாவட்டத்தில் உதகமண்டலத்திலும் கூனூரிலும் நிலவும் கடுமையான விறகுத் தட்டுப்பாடு குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, 1979 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் நீலகிரி மாவட்ட ஆட்சியாளர் உதகமண்டலம் மற்றும் கூனூர் பகுதிகளில் விறகு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்றும், இந்த நிலையை மாற்றி இந்த மலைவாழ் பகுதி மக்களுக்கு விறகு நியாய விலையில் போதுமான அளவு கிடைக்க சில ஏற்பாடுகளைப் பரிந்துரை செய்தார். இது பற்றி அரசு உடனடியாக வனத்துறைத் தலைவருடன் கலந்தாலோசித்து கீழ்க்கண்ட ஆணைகளை பிறப்பித்துள்ளது. அவற்றின் விவரங்கள் பின் வருமாறு :—

(i) சேகூர் வனச்சரகத்திலுள்ள சுமார் 1,000 டன்கள் எடையுள்ள உடைந்து சிதறிய மரங்கள் (drift wood) உடனடியாக மாவட்ட வன அதிகாரியால் பொது ஏலத்தில் விறகாகப் பயன்படுத்த அனுமதிக்கப் பட்டது. இந்த மரங்கள் தொழில் நிறுவனங்களால் பயன்படுத்தப்பட முடியும் என்றாலும் இம் மரங்களை நீலகிரி மாவட்டத்தை விட்டு எடுத்துச் செல்லக் கூடாது. நீலகிரி மாவட்டத்திற்குள்ளேயே விறகாக பயன்படுத்தப் பட வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டது.

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1979 நவம்பர் 7

(ii) ஒவ்வொன்றும் 25 ஹெக்டேர் பரப்புள்ள இரண்டு மிளாறு மரப் பகுதிகள் விறகு தட்டுப்பாட்டைத் தவிர்க்க வனத்துறையால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்க அனுமதிக்கப்பட்டது. பாதிக்கப்பட்டுள்ள பகுதி களுக்கு துரிதமாக விறகு விநியோகம் செய்ய இந்தப் பகுதிகள் விறகு தட்டுப் பாடுள்ள இடங்களின் பக்கத்தில் இருப்பவையாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று வனத்துறைத் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

(iii) நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள விறகுத் தட்டுப்பாட்டை நிவர்த்திக்க தமிழ்நாடு மலைவாழ் இடங்கள் (மரங்கள் பாதுகாப்பு) சட்டத் தின் கீழ் விறகிற்கு மட்டும் பயன்படும் சில குறிப்பிட்ட மரங்களை வெட்டு வதற்கு மாநில ஆட்சியாளர் அனுமதி அளிக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது.

2. 18—10—1979 அன்றும் 19—10—1979 அன்றும் நீலகிரி மாவட்ட ஆட்சியாளர் உதகமண்டலம் கூனூர் பகுதிகளில் ஏற்பட்டுள்ள விறகு தட்டுப் பாட்டை நிவர்த்திக்க எடுத்துக் கொண்டுள்ள முயற்சிகள் பற்றி வனத் துறைத் தலைவருடன் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார். அரசுடன் மேலும் கலந்து வனத்துறை தலைவர் மேலும் 100 ஹெக்டேர் பரப்புள்ள பட்டை உரிக்கப்பட்ட மிளாறு மாப் பகுதிகளை விறகாக பயன்படுத்தி நீலகிரியி லுள்ள கூட்டுறவு சங்கங்களுக்கு அளிக்க மாவட்ட வன அதிகாரியை கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் கூட்டுறவு சங்கங்களால் எடுத்துச் செல்ல முடியாத இடங்களில் உள்ள ப்ளூகம் மரங்கள் மற்றும் மெலிதான மிளாறு மரங்களை விறகாக பயன்படுத்த பொது ஏலத்தில் விடவும் ஏற்பாடுகள் செய்துள்ளார்.

3. சேகூர் வனச் சரகங்களிலிருந்து விறகிற்காகப் பயன்படுத்த அரசு உத்தரவிட்ட மரங்களில் ஒரு பகுதி பொது ஏலத்தில் விடப்பட்டுள்ளது என்றும், மற்றுமொரு பகுதி கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வினியோகம் செய்யப்பட்டுள்ளது என்றும், இது தவிர 150 ஹெக்டேர் பரப்பளவு உள்ள பட்டை உரிக்கப்பட்ட மிளாறு பகுதிகள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்க ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் நீலகிரி மாவட்ட ஆட்சியாளர் தெரிவித்துள் ளார். இந்த மரங்கள் விறகாக நகர பகுதிகளுக்கு வர ஆரம்பித்து விட்ட தென்றும் இதனால் விறகு இருப்பு நிலை முன்னேறியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இப் பகுதிகளில் இப்பொழுது கூட்டுறவுச் சங்கங்கள் 10 கிலோ சிதறிய துண்டுகள் ரூபாய் 1.90 என்ற விலைக்கும் கூழ் மாத்தை ரூபாய் 2.50-க்கும் விற்கின்றது. தனியார் விறகு கிடங்குகளில் 10 கிலோ விறகு ரூபாய் 2.80-லிருந்து ரூபாய் 3-20 வரை விற்கப்படுகிறது. உள்ளூரில் விறகு கிடைப்பதற்காக இம் மாவட்டத்திலிருந்து விறகு எடுத்துப் போக தடை

விதிக்கப்பட்டுள்ளது. அரசு எடுத்துள்ள முயற்சிகள் மூலம் விறகு தட்டுப்பாடு நிலை நீங்கி இப்பொழுது விறகு போதிய அளவு கிடைக்கிறது; மேலும் சில நாட்களில் நிலைமை இன்னும் முன்னேறும் என்றும் மாவட்ட ஆட்சியாளர் கூறியுள்ளார்.

4. அரசு எடுத்துள்ள மேற்கூறிய உடனடியான நடவடிக்கைகளால் நீலகிரி மாவட்டத்திலுள்ள உதக மண்டலத்திலும் கூனூரிலும் இந்த வருடம் ஏற்பட்டுள்ள விறகுத் தட்டுப்பாடு நீங்கி மக்களுக்கு நியாய விலையில் விறகு கிடைக்க வழி ஏற்பட்டுள்ளது.

(முற்பகல் 10-50)

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, மக்களுக்கு நியாயமான விலையில் விறகு கிடைக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தனியார் கடைகளில் விற்பனைக்கு விறகு இல்லை என்ற நிலை, நியாய விலைக் கடைகளில் ஒரு ரூபாய் 65 பைசா, பத்து கிலோ விறகுக்கு விலை இருந்தது. தனியார் கடைகளில் 3 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. முன்னால் 1.50-லிருந்து 1.60 என்று ஆகி, பின்னால் 1.90 என்று ஆகி இப்போது 2.50 என்ற நிலையில் விற்கப்படுகிறது. இது என்ன நியாய விலை. அடுத்து வெளியில் விஸ்கோஸ்-க்கு 1.50 என்ற விலையில் விறகு கொடுக்கப்படுவதாகத் தெரிகிறது. அந்த விலையில் மக்களுக்கும் விறகைக் கொடுக்க அரசு முன்வருமா? மேலும் அந்தப் பகுதிகளில் இருந்து வருகின்ற விறகு தட்டுப்பாட்டைப் போக்குவதற்கு பக்கத்திலுள்ள எல்லா மரங்களையும் விறகுக்காகக் கொடுக்க அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, விலையைப் பற்றிச் சொன்னார்கள். ஆரம்பத்தில் கூட்டுறவு சங்கங்களுக்கு மிகக் குறைந்த விலையில் ஒதுக்கி விறகு வழங்கப் பெற்றது. பின்னால் அதிக அளவு மரங்களை எடுப்பதில் அதிக செலவு ஏற்படுவதின் காரணமாக அடக்க விலையிலிருந்து சிறிது உயர்த்தியிருக்கிறார்கள். கூட்டுறவுச் சங்கம் என்றாலும் நஷ்டத்திற்கு விற்க முடியாது என்பதை மிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். மேலும் நீலகிரி மாவட்டத்திலுள்ள மரங்களை எல்லாம் விறகு பற்றாக்குறையைப் போக்குவதற்காக மரங்களை வெட்டுவதற்கு அனுமதி வழங்கப்படுமா என்று கேட்கிறார்கள். அப்படி மரங்களை வெட்டுவதற்கு அனுமதி வழங்க முடியாது. எந்த அளவுக்கு

விறகுக்காக மரங்களை வெட்டலாம் என்பதைப்பற்றி நான் குறிப்புக் கொடுத்திருக்கிறேன். குறிப்பிட்ட விதத்தில் அனுமதி வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்திருக்கிறேன். மேலும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சில பரிந்துரைகளைச் செய்திருக்கிறார். அதையொட்டி தனியார் தேயிலைத் தோட்டங்களில் காப்பித் தோட்டங்களில் இருக்கின்ற சில பெரிய மரங்களை விறகுக்குப் பயன்படுத்திக் கொள்வதற்காக வெட்டலாம் என்று அனுமதி வழங்கலாமா என்பது அரசின் தீவிர பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, நான் ஒன்றை மட்டும் கேட்க விரும்புகிறேன். விஸ்கோஸ்-தொழிற்பேட்டைக்குக் கொடுக்கப்படும் விலையில் மக்களுக்கு விறகு கிடைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: விஸ்கோஸ்-க்கு தனியாக விறகுக்கு என்று மரங்கள் கொடுப்பதில்லை. மூலப்பொருட்கள் என்ற அளவில் கொடுக்கப்படுகிறது. அதற்கென்று தனியாக விலை நிர்ணயிக்கப் படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(5) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

அ. சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை-காமராசர் பல்கலைக் கழகம் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, "1979 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை-காமராசர் பல்கலைக் கழகம் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவை" பேரவை முன் அறிமுகப் படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

TRUTH ALONE TRIUMPHS